# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர்:முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A., PGDJMC.,Ph.D. **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர்: முனைவர்: ஃபாரூக் அலி எம். B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 183 | செவ்வாய்க்கிழமை Tuesday | 29.09.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# ‘தாய்மாமன் தங்க மோதிரம்’ திட்டத்தை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைத்தார்



தங்க மோதிரம் திட்டத்தை இன்று (செப். , 28) மதுரை அரசு ராஜாஜி மருத்துமனையில் முறைப்படி தொடங்கி வைத்தார் முதல்வர் விஜய்.

தாய்மாமன் தங்க மோதிரம் திட்ட தொடக்க விழாவுக்காக மதுரை வந்த முதல்வர் விஜய், விமான நிலையத்தில் இருந்து அரசு மருத்துவமனைக்கு சாலை வழியாகச் சென்றார். வழிநெடுகிலும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது அப்போது, மீனாட்சி அம்மன் வேடமணிந்து நின்ற பெண் குழந்தையை கையில் தூக்கி வாஞ்சையுடன் வாழ்த்தினார் முதல்வர் விஜய், தன்னுடன் மேடையில் இருந்த மூன்று தாய்மார்கள் கையிலிருந்த குழந்தைகளுக்கு மட்டும் மோதிரத்தை கையில் மாட்டிவிட்டார்.

தொடர்ந்து மேடைக்கு கீழே அமர்ந்திருந்த தாய்மார்கள் கையில் மோதிரத்தை வழங்கினார். அப்போது சில பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கும் மோதிரத்தை முதல்வரே கையில் மாட்டிவிடும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் ஆசையை நிறைவேற்றும் வகையில் அக்குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் கைகளிலேயே மோதிரத்தை மாட்டிவிட்டார். அந்தப் பெண்ணை முதல்வர் விஜய் கட்டிப்பிடித்து ஆறுதல்படுத்தினார்.

கடைசியாக முதல்வர் விஜய், 'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டத்தில் பயனடைந்த தாய்மார்கள், அவர்கள் குழந்தைகளுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். அப்போது சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முதல்வர் கையில் வழங்கி மகிழ்ச்சியடைந்தனர். புகைப்படம் எடுத்து முடித்தும், அனைத்து தாய்மார்களுடன் முதல்வர் விஜய் 'செல்ஃபி' புகைப்படமும் எடுத்துக் கொண்டார்.

முன்னதாகப் பேசிய அமைச்சர் அருண் ராஜ், "தாய் மாமன் தங்க மோதிரத் திட்டத்தின் தங்கத்துக்கு அரசே உத்தரவாதம். முதல் கட்டமாக 1 லட்சத்து 28 ஆயிரத்து 499 மோதிரங்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. பிரசவமாகி வீடு திரும்பும் போதே மோதிரங்கள் வழங்கப்படும்.

சித்திரைத் திருழாவில் தங்கைக்காக அண்ணன் சீர் சுமந்து வரும் பாசப் பூமியில் தாய்மாமன் தங்க மோதிரம் பாசத்திட்டம் தொடங்கப்படுவது பொருத்தமாக இருக்கும் என்ற அடிப்படையில் தான் 'தாய்மாமன் தங்கமோதிரம்' திட்டத்தை மதுரையில் முதல்வர் விஜய் தொடங்கி வைத்துள்ளார்" என்று கூறினார்.

# மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் முதலமைச்சர் விஜய் சாமி தரிசனம் செய்தார்



மதியம் அவுட்போஸ்டில் உள்ள அரசினர் சுற்றுலா மாளிகைக்கு சென்ற முதல்-அமைச்சர் விஜய் மதிய உணவை முடித்துக்கொண்டு சிறிது நேரம் ஓய்வு எடுத்தார். தொடர்ந்து மாலை 4 மணிக்கு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சென்றார்.

கோரிப்பாளையம், நெல்பேட்டை, கீழவாசல், விளக்குத்தூண், ஜடாமுனி கோவில் தெரு வழியாக மீனாட்சி அம்மன்கோவில் கிழக்கு நுழைவு வாயிலை அடைந்தார் அதனை தொடர்ந்து அவருக்கு கோவில் நிர்வாகம் சார்பில் பூரண கும்ப மரியாதை அளிக்கப்பட்டு கோவிலுக்குள் அழைத்து செல்லப்பட்டார். மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வருகை புரிந்த முதல்-அமைச்சர் விஜய்க்கு அறங்காவலர் குழுத் தலைவரும், பி.டி.ஆர்பழனிவேல் தியாகராஜனின் தாயாருமான ருக்மணி அம்மாள் வரவேற்பு அளித்தார்.

அண்மையில் கும்பாபிஷேகம் நடந்து முடிந்த மீனாட்சி அம்மன் கோவில் புதுபொலிவுடன் காட்சி அளிக்கிறது. கோவிலுக்கு வருகை தந்த முதல்-அமைச்சர் விஜய் பொற்றாமரை குளம், அம்மன், சுவாமி சன்னதி பிரகாரங்கள், புதிதாக புனரமைக்கப்பட்ட வீரவசந்தராயர் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் உள்ளிட்டவற்றை பார்வையிட்டார்.

மீனாட்சி அம்மன் கோவிலில் நாள்தோறும் அம்மனுக்கு 8 கால பூஜைகள் நடைபெறுகிறது. ஒவ்வொரு பூஜையின்போதும் அம்மன் வெவ்வேறு அலங்காரத்தில் அருள்பாலித்து வருகிறார். ஒவ்வொரு பூஜையிலும் தரிசனம் செய்யும்போது அதற்கேற்ற பலன்களும் கிடைக்கும் என்பது நம்பிக்கையாக உள்ளது.

இன்று மாலை கோவிலுக்கு வந்த முதல்-அமைச்சர் விஜய் 4.30 மணிக்கு நடைபெறும் சாயரட்சை பூஜையில் கலந்து கொண்டு அம்மனை தரிசித்தார். இந்த பூஜையின்போது பஞ்ச தசி வடிவத்தில் மீனாட்சி அம்மன் அருள்பாலிப்பார். அப்போது அம்மனை வழிபட்டால் குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். தொழில் சிறக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

சுமார் 30 நிமிடம் அம்மன், சுவாமி சொக்கநாதர் சன்னதிகளில் முதல்-அமைச்சர் விஜய் வழிபட்டார். கோவிலுக்கு வந்த அவருக்கு அண்மையில் புதிதாக அசாமில் இருந்து வாங்கி வந்த துர்கா என்ற யானை மூலம் மாலை அணிவித்து வரவேற்பு அளிக்கப்பட்டது. முதல்-அமைச்சருடன் புஸ்சி ஆனந்த், அருண்ராஜ், நிர்மல்குமார், ரமேஷ் உடன் சென்றனர்.

முதல்-அமைச்சர் விஜய் மீனாட்சி அம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் சாலையின் இருமருங்கிலும் மக்கள் திரண்டு இருந்து ஆர்ப்பரித்தனர். விஜய் வருகையால் மதுரை நகரம் முழுவதுமே விழாக்கோலம் பூண்டுள்ளது.

# 400 மீட்டர் தடை ஓட்டத்தில் வெண்கலம்... பி.டி. உஷாவின் 42 ஆண்டு கால சாதனையை முறியடித்த வித்யா



ஆசிய விளையாட்டில் பி.டி. உஷாவின் 42 ஆண்டு கால சாதனையை வித்யாராம்ராஜ் முறியடித்துள்ளார்.

20-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகள் ஜப்பானின் அய்ச்சி மாகாணத்தில் உள்ள நகோயா நகரில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. இதில் இந்திய வீரர், வீராங்கனைகள் பல்வேறு போட்டிகளில் சிறப்பாக செயல்பட்டு பதக்கங்களை குவித்து வருகின்றனர். இந்நிலையில், பெண்களுக்கான 400 மீட்டர் தடை ஓட்டத்தில் இந்தியாவின் வித்யா ராம்ராஜ் 54.75 விநாடிகளில் இலக்கை கடந்து வெண்கலப் பதக்கம் வென்றுள்ளார். இதன் மூலம் பி.டி.உஷாவின் சாதனையை வித்யா ராம்ராஜ் முறியடித்தார்.

இதற்கு முன்பு 1984-ம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியின் 400 மீட்டர் தடை ஓட்ட இறுதிப்போட்டியில் பி.டி. உஷா 55.42 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்திருந்தார். இதுவே 42 ஆண்டுகளாக தேசிய சாதனையாக இருந்து வந்தது. தற்போது வித்யா ராம்ராஜ் 54.75 விநாடிகளில் பந்தயத்தை நிறைவு செய்து பி.டி. உஷாவின் நீண்ட கால தேசிய சாதனையை முறியடித்துள்ளார். சமன்கடந்த 2023-ம் ஆண்டு ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் வித்யா ராம்ராஜ், பி.டி. உஷாவின் தேசிய சாதனையான 55.42 விநாடிகளை சமன் செய்திருந்தார். தற்போது அதைவிட வேகமாக ஓடி சாதனையை முறியடித்துள்ள வித்யா ராம்ராஜ், தனது பெயரில் புதிய தேசிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

மேலும், ஆண்களுக்கான 90 கிலோ எடைப் பிரிவு குத்துச்சண்டை காலிறுதிப் போட்டியில், தென் கொரிய வீரரை 5-0 என்ற கணக்கில் வீழ்த்தி இந்தியாவின் கபில் போகாரியா அரையிறுதிக்கு முன்னேறினார்.

இதன் மூலம், இந்தியாவுக்கு மேலும் ஒரு பதக்கம் உறுதியாகி உள்ளது.

# தங்கம் விலை ஒரே நாளில் ரூ.2,680 குறைவு: காரணம் என்ன?

சென்னை: 22 காரட் ஆபரணத் தங்கம் (செப்.28) ஒரே நாளில் பவுனுக்கு ரூ.2,680 குறைந்துள்ளது. காலையில் பவுனுக்கு ரூ.1,880 குறைந்த நிலையில், மாலையில் மேலும் ரூ.800 குறைந்துள்ளது.

சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் சூழல், கச்சா எண்ணெய் விலை, அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு, தங்கத்தின் மீதான முதலீடு, உலக பங்குச் சந்தை செயல்பாடு உள்ளிட்டவற்றின் அடிப்படையில் தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது.

கடந்த மே மாதம் தங்கம் மீதான சுங்க வரியை



6 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக மத்திய அரசு உயர்த்தியது. இதோடு கடந்த 1-ம் தேதி அன்று 'தேவையின்றி தங்கம் வாங்காதீர்கள்' என நாட்டு மக்களிடம் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

இதையடுத்து தங்கம் விலை சந்தையில் ஏற்ற இறக்கத்துடன் விற்பனை ஆகிறது. இந்நிலையில், சென்னையில் தங்கம் விலை சனிக்கிழமை பவுனுக்கு ரூ.80 என குறைந்தது. இந்நிலையில், சென்னையில் இன்று காலை வர்த்தகம் தொடங்கியதும் 22 காரட் ஆபரணத் தங்கம் விலை கிராமுக்கு ரூ.235 குறைந்து, ஒரு கிராம் ரூ.13,765-க்கு விற்பனையாகிறது. பவுனுக்கு ரூ.1,880 குறைந்து, ஒரு பவுன் ரூ.1,10,120-க்கு விற்பனையானது.

மாலையில் கிராமுக்கு மேலும் ரூ.100 குறைந்து, பவுனுக்கு ரூ.800 குறைந்தது. 22 காரட் ஆபரணத் தங்கம் ஒரு கிராம் ரூ.13,665-க்கும், ஒரு பவுன் ரூ.1,09,320-க்கும் விற்பனையாகிறது. இதனால் இன்று ஒரே நாளில் தங்கம் பவுனுக்கு ரூ.2680 குறைந்துள்ளது. ஒரே வாரத்தில் பவுனுக்கு ரூ.4960 சரிந்துள்ளது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் இன்று கிராமுக்கு ரூ.5 குறைந்து, ஒரு கிராம் ரூ.245-க்கும், கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து, ஒரு கிலோ ரூ.2,45,000-க்கும் விற்பனை ஆகிறது.அமெரிக்க ஃபெடரல் வங்கி வரும் அக்டோபரில் மீண்டும் வட்டி விகிதத்தை உயர்த்தக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சமீபமாக, ஏமன் மற்றும் சவுதி அரேபியா இடையே நடந்து வரும் மோதலால் கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது.

கச்சா எண்ணெய் விலை உயர்வால் பணவீக்கம் அதிகரித்துள்ளது. அமெரிக்க கருவூலப் பத்திரங்களின் வருவாய் உயர்ந்துள்ளது. இவை தங்கத்தின் மீதான முதலீடுகளைக் குறைத்துள்ளன.

தொடர்ந்து டாலரின் மதிப்பு மேலும் உயர்ந்துள்ளது. டாலர் வலுவடையும் போது சர்வதேச சந்தையில் தங்கத்தின் விலை இயல்பாகவே குறைகிறது.

இந்தச் சூழலில் தங்கம் விலை மேலும் சரிவை நோக்கிச் செல்ல வாய்ப்புள்ளதாகச் சந்தை வல்லுநர்கள் கணிக்கின்றனர்.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# கேளுங்கள்... கேளுங்கள்! AIR மதுரை பண்பலை 103.3லும், ராமேஸ்வரம் பண்பலை 100.9ல் தேவகோட்டை பள்ளி தலைமையாசிரியரின் பேட்டி




தேவகோட்டை: சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளியின் தலைமையாசிரியர் சொக்கலிங்கம், அகில இந்திய வானொலி மதுரை பண்பலை 103.3-லும்,ராமேஸ்வரம்பண்பலை 100.9-ல் ஒலிபரப்பாகும் "விருந்தினர் பக்கம்" நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

இதுகுறித்து பள்ளித் தலைமையாசிரியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அகில இந்திய வானொலி மதுரை வானொலியின் "விருந்தினர் பக்கம்" நிகழ்ச்சியில் எனது பேட்டி நாளை 28ஆம் தேதி காலை 10 மணிக்கும், 29ஆம் தேதி காலை 10 மணிக்கும் ஒலிபரப்பாக உள்ளது.

இந்நிகழ்ச்சியில் பள்ளியில் பெற்றுள்ள பல்வேறு கல்வி அனுபவங்கள், பள்ளி தொடர்பான செயல்பாடுகள் மற்றும் பணி தொடர்பான அனுபவங்கள் குறித்து பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இனிமையான பாடல்களுடன் கல்வி சார்ந்த பல்வேறு தகவல்களும் இடம்பெறுகின்றன.

கல்வியின் பல்வேறு செயல்பாடுகள், மாணவர்களின் கற்றல் அனுபவங்கள் உள்ளிட்ட தகவல்களை பொதுமக்கள் இந்நிகழ்ச்சியின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். நிகழ்ச்சியை அறிவிப்பாளர்தமிழ்ச்செல்வி ஒருங்கிணைத்துள்ளார்.

வானொலி நிகழ்ச்சியை மொபைல் போன் மூலமாகவும் நேரலையில் கேட்டு மகிழலாம். அதற்காக கீழ்க்கண்ட இணைப்பைப் பயன்படுத்தலாம்:

https://radiosindia.com/maduraifm.html

பள்ளியின் கல்விச் செயல்பாடுகள் மற்றும் அனுபவங்களை அறிந்துகொள்ள அனைவரும் நிகழ்ச்சியை கேட்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



ஈரோடு மாவட்டம், கொடுமுடி மகுடேஸ்வரர் மற்றும் வீரநாராயணப்பெருமாள் திருக்கோவில் படித்துறை பகுதியில் தூய்மை பேணுதல் முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ) துவக்கி வைத்தார்.

# கோவையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி



கோவையில் முதல் முறையாக நீலம்பூர் கார்த்திபுரத்தில் ஒரே நேரத்தில் 7 மைதானங்களில் பிரமாண்டமாக நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கும் விழா...

கார்ப்பரேட் ஃப்ரெண்ட்ஸ் கிரிக்கெட் கிளப் மற்றும் ரியம் ஸ்போர்ட்ஸ் இணைந்து, பெட்ரோஸ்கி குரூப் ஆஃப் கம்பெனீஸ் வழங்கும் 'இண்டிபெண்டன்ஸ் கிரிக்கெட் கப்' கிரிக்கெட் போட்டிகள், கோவை நீலம்பூர் கார்த்திபுரத்தில் நடைபெற்று வந்தது.

அனைத்து போட்டிகளும் கார்த்திபுரம் டவுன்ஷிப் மைதானத்தில் நடைபெற்றது. இதில், கிர்டிலால்ஸ், அரோமா, ஏபிடி மாருதி, அகர்வால் ஸ்வீட் பேலஸ், ஹெச்.டி.எப்.சி வங்கி, ரமணி கார்ஸ் மற்றும் இண்டஸ் நோவேட்டர் ஆகிய நிறுவனங்கள் இணைந்து ஆதரவு வழங்குகியது,

மொத்தமாக,120கிரிக்கெட் அணிகள், 10 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக, நடைபெற்றதில் கலந்துகொண்டனர்பல்வேறு அணிகள் பங்கேற்ற இத்தொடரின் போட்டிகள், செப் 6, 12, 13 ஆகிய தேதிகளில் நாக்-அவுட் முறையில் நடைபெற்றது. தொடர்ந்து, காலிறுதி மற்றும் அரையிறுதி, மற்றும் இறுதிப்போட்டிகள் நடைபெற்றது,இதிலமுதலிடம் பிடித்த அணிக்கு, ரூ.50 ஆயிரம் ரூபாய், ரொக்கமும், இண்டிபெண்டன்ஸ்சுழற்கோப்பையும் வழங்கப்பட்டது. இரண்டாமிடம் பிடித்த அணிக்கு, ரூ.30 ஆயிரம் ரூபாய் ரொக்கமும் பரிசுக்கோப்பையும், மூன்றாமிடம் பிடித்த அணிக்கு, ரூ.10 ஆயிரம் ரொக்கப்பரிசுடன் பரிசுக்கோப்பையும் வழங்கப்பட்டது.

இளைஞர்களை விளையாட்டின் பக்கம் ஈர்த்து, போதைப்பொருள் பயன்பாட்டைத் தவிர்த்து, போதை இல்லாத எதிர்காலத்தை உருவாக்கும் நோக்கில் இக்கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்பட்டது. கோவை நீலம்பூர் கார்த்திபுரத்தில் ஒரே நேரத்தில் 7 மைதானங்களில் மிகப் பிரமாண்டமாக நடந்த, இந்த கிரிக்கெட் போட்டியில்முதல்பரிசை ப்ரோபெல் நிறுவன ஊழியர்கள் தட்டி சென்றனர் இவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் பணமும், கோப்பைகளும் வழங்க பட்டது. இரண்டாவது இடத்தை விப்ரோ நிறுவன ஊழியர்கள் அணி பிடித்தது. இவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய் பணமும் கோப்பைகளும் வழங்கபட்டது.தொடர்ச்சியாக மூன்றாம் இடம், நாண்காம் இடம் பிடித்த அணிகளுக்கும் கோப்பைகளுடன் படமுடிச்சுக்களும் வழங்க பட்டது என்பது சிறத்த பந்து வீச்சாளர்கள், மற்றும் பேட்ஸ்மென்களுக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# கோவையில் மணியகாரன்பாளையம் அன்றும் இன்றும் வரலாற்று நூல் வெளியீடு



கணபதி மணியகாரன்பாளையம் பகுதியின் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில், முன்னாள் மாமன்ற உறுப்பினர் மு. கிருஷ்ணசாமி எழுதிய "கோவை - கணபதி மணியகாரன்பாளையம் அன்றும் இன்றும் (1800-2026)" என்ற வரலாற்று நூல் வெளியீட்டு விழா, கிருஷ்ணகவுண்டர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழாவிற்குமுருகேசன் தலைமை வகித்தார்.

நடராஜ் கவுண்டர், வேலுமணி நாயுடு, பழனிச்சாமிக்கவுண்டர், சண்முகசுந்தரம்,முத்துசாமி உடையார்,சண்முகசுந்தரம், ரகுபதி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் சி. நடராஜ், ஆறுக்குட்டி உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். நூலாசிரியர் மு. கிருஷ்ணசாமி வரவேற்றுப் பேசினார்.

விழாவில் ஆடிட்டர் அர்ஜுனன்ராஜ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு நூலை வெளியிட்டார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருண்குமார், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் நித்தியானந்தம், அறிவழகன் ஆகியோர் நூலின் முதல்பிரதிகளைப்பெற்றுக்கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற நூல் மதிப்புரை நிகழ்ச்சியில்சிந்தனைக்கவிஞர் கவிதாசன், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் ராஜ்குமார், பி.ஏ. கல்விக் குழுமத் தலைவர் அப்புக்குட்டி, செல்வம் ஏஜென்சிஸ் நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டு நூலின் சிறப்புகள் குறித்தும், மணியகாரன்பாளையம் பகுதியின் வளர்ச்சி குறித்தும் பேசினர்.

மேலும் மனிதநேயர் கோவை இரமேஷ், ,பிரபு, அரிமா சுப்பையன், அரிமா கமலாபிரஸ் ராஜு, வழக்கறிஞர்கள் செந்தில்குமார்,சிவசாமி தமிழன், சிவஞானம், மனோகரன்,ஜானகிசம்பத், சசிக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக வித்வான் செல்வராஜ் குழுவினரின் நாதஸ்வர இசை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. நிகழ்ச்சியை நடராஜ் ஆசிரியர் தொகுத்து வழங்கினார். செல்வராஜ் நன்றியுரை கூறினார்.

1800-ம் ஆண்டு முதல் 2026-ம் ஆண்டு வரையிலான மணியகாரன்பாளையம் பகுதியின் வரலாற்றுச் சுவடுகள், பழமையான கோயில்கள், கல்வி நிறுவனங்கள், அரசு அலுவலகங்கள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய இந்த நூல், அப்பகுதியின் வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் முக்கிய ஆவணமாக அமைந்துள்ளது.

# ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அமைச்சர் ம.விஜய் பாலாஜி அணிவித்தார்



ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் தாய்மாமன்தங்கமோதிர திட்டத்தினை துவக்கி வைத்து, அரசு மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகளுக்குதங்கமோதிரம் வழங்குவதை தொடர்ந்து, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அணிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் மதுரை ராஜாஜி மருத்துவ மனையில் தாய்மாமன் தங்க மோதிர திட்டத்தினை துவக்கி வைத்து, அரசு மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகளுக்குதங்கமோதிரம் வழங்குவதை தொடர்ந்து, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஈரோடு மாவட்டம் பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை நேற்று (28.09.2026) அணிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி தலைமையும், சட்டமன்ற உறுப்பினர்கள் (ஈரோடு மேற்கு) கா.க.ஆனந்த் மோகன், டி.சண்முகன் (மொடக்குறிச்சி) ஆகியோர் முன்னிலையும் வகித்தார்கள்.

இத்திட்டத்தின் கீழ், 22.06.2026 அன்று முதல் அரசு மருத்துவமனைகளில் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 7.80 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. இவற்றில் 99.9 சதவீத பிரசவங்கள் மருத்துவமனைகளில் நடைபெறுகின்றன இவற்றில் 4.20 இலட்சம் பிரசவங்கள் (53%) அரசு மருத்துவமனைகளில் நிகழ்கின்றன. இதன்மூலம், பாதுகாப்பான பிரசவம் மற்றும் ஆரோக்கியமான குழந்தைகளின் பிறப்பை உறுதி செய்வதில் பொது சுகாதார அமைப்பு முக்கியப் பங்கு வகிக்கிறது. தாய்மாமன் தங்கமோதிரம் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரு கிராம் எடை கொண்ட தங்க மோதிரம் வழங்கப்படும். அதற்கென தனித்துவமான வரிசை எண்ணும் (Unique Serial Number). சேதப்படுத்த முடியாத பாதுகாப்புப் பெட்டகமும் (Tamper-proof Packaging) வழங்கப்படுகிறது.

21.09.2026 வரை பிறந்த 1246 குழந்தைகளுக்கும்., 22.09.2026 முதல் 27.09.2026 வரை பிறந்த 242 குழந்தைகளுக்கும், நேற்று பிறந்த 17 குழந்தைகளுக்கும். ஆக மொத்தம் ஈரோடு மாவட்டத்தில் 1505 குழந்தைகளுக்கும் தங்க மோதிரங்கள் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டில் நிரந்தரமாக வசிக்கும் தாய்மார்கள் இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவார்கள். PICME-யில் பதிவு செய்யப்பட்டு RCH அடையாளஎண்(RCHID) பெற்றிருக்க வேண்டும். இத்திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 28.09.2026 மேலும், அரசு அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மருத்துவமனைகளில் 22.06.2026 முதல், திட்டம் தொடங்கப்படும் நாள் வரை பிறக்கும் குழந்தைகளுக்கு ஈரோடு மாவட்டத்தில் உள்ள 78 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 8 அரசு மருத்துவமனைகள், 1 அரசு மருத்துவக் கல்லூரி என 87 இடங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு, பெருந்துறை,அரசுமருத்துவக்கல்லூரி ஈரோடு, ஈரோடு தலைமை அரசு மருத்துவமனை, கோபி அரசு மருத்துவமனை, சத்தி அரசு மருத்துவமனை, ஆகிய 4 மையங்களில் (Hubs) வழங்கப்படவுள்ளது.

தினமும் 50 குழந்தைகள் வீதம் 28.09.2026 முதல் வழங்க உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இத்திட்டம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்படும் நாளிலிருந்து அரசு மருத்துவமனைகளில் பிறந்த குழந்தைகளுக்கு மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பும்போது தங்க மோதிரம் வழங்கப்படும். இத்திட்டம், அரசு மருத்துவ சேவைகளில் மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதோடு, மருத்துவமனைகளில் பாதுகாப்பான பிரசவமுறையை ஊக்குவிப்பதாகவும், தாய்-சேய் நலப்பாதுகாப்பைவலுப்படுத்துவதாகவும், குழந்தை நலனில் அரசின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் இணை இயக்குனர். (பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சென்னை) மரு. சு.கிருஷ்ணராஜ், இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.ஜெயந்தி, மாவட்ட சுகாதர அலுவலர் மரு.அருணா, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மரு.செந்தில்குமார்,உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# கோவை மாநகர காவல் ஆணையரிடம் மனு அளித்த நாராயணகுரு அமைப்பினர்



ஸ்ரீநாராயண குருதேவ சுவாமிகள் குறித்து சமூக வலைதளங்களில் அவதூறான கருத்துகளைப் பரப்பிய நபர் மீது கடும்நடவடிக்கைஎடுக்கக் கோரி கோவை மாநகரகாவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் அளிக்கப்பட்டுள்ளது.

கேரளா மற்றும் தமிழகஎல்லைப்பகுதிகளில் அனைத்துத் தரப்பு மக்களாலும் பெரிதும் போற்றப்பட்டு வணங்கப்படும் ஆன்மீகப் பெரியவர் ஸ்ரீநாராயண குருதேவ சுவாமிகள்.

இவரைப்பற்றி,கேரளா மாநிலம்இடுக்கிமாவட்டம் தொடுபுழா பகுதியைச் சேர்ந்த 'சுபாஷ்' என்பவர், சமூக வலைதளங்களில் தரக்குறைவாகவும், அவமதிக்கும் வகையிலும் தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி வீடியோ வெளியிட்டதாகக் கூறப்படுகிறது. இந்த வீடியோ சமூக நல்லிணக்கத்தைக் கெடுக்கும் வகையிலும், பொதுமக்களின் மத உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலும் வேகமாக பரவி வருகிறது.

இது தொடர்பாக, கோயம்புத்தூர் குருதேவன் சமாஜத்தின் கூட்டமைப்பை சேர்ந்தவர்கள் கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் மனு அளித்து தமிழகத்திலும் சுபாஷ் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்கள் மேலும்

சமூக வலைதளங்களில் இந்த அவதூறு வீடியோவை வெளியிட்ட சுபாஷ் என்பவரின் டிஜிட்டல் ஆதாரங்களை உரிய முறையில் சேகரித்து விசாரணை நடத்த வேண்டும்.மத உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு பதிவிடப்பட்டுள்ள இந்தக் கணக்கின் பின்னணி மற்றும் ஐபி முகவரிகளை ஆய்வு செய்ய வேண்டும்.

சட்ட ஒழுங்கு மற்றும் சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும் வகையில் செயல்பட்ட அந்த நபர் மீது குற்றவியல் சட்டப் பிரிவுகளின் கீழ் வழக்குப்பதிவு செய்து சட்டப்படி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தேவைப்பட்டால் சைபர் கிரைம் பிரிவின் தொழில்நுட்ப உதவியைப் பெற்று, இந்த அவதூறு பதிவுகள் நீக்கப்படாமல் ஆதாரமாகப் பாதுகாக்கப்பட வேண்டும்.

மனுதாரர் தரப்பில், இந்தச் சம்பவம் தொடர்பான வீடியோ ஆதாரங்கள் அடங்கிய 'பென்டிரைவ்' காவல்துறையிடம் ஆதாரமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் மத உணர்வுகளையும், சமூக அமைதியையும் பாதுகாக்கும் வகையில் காவல் துறை உடனடியாக இந்த விவகாரத்தில் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும், ஆன்மீக அன்பர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நிகழ்ச்சியில் கோவை குருதேவசமாஜம்தலைவர் அனீஸ் குமார், செயலாளர் நாராயணன் குட்டி, பொருளாளர் கண்ணப்பன், அனில்தாஸ், பிஜு, திலிப், கோவை மாவட்ட ஸ்ரீ நாராயண குரு சொசைட்டி தலைவர் ஜனிக்கர் சசி, செயலாளர்குணசேகரன்,பொருளாளர் அசோகன், ஸ்ரீ நாராயண குரு தமிழக பேரமைப்பு தலைவர் செந்தாமரை, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சுரண்டை ஸ்ரீ அன்னலட்சுமி இன்ஸ்டிட்யூட்டில் 7 வது ஆண்டு புதிய மாணவிகளின் வரவேற்பு விழா நடைபெற்றது



சுரண்டை ஸ்ரீ அன்னலட்சுமி இன்ஸ்டிட்யூட் ல் 25.09.26 வெள்ளிக்கிழமை 7 வது ஆண்டு புதிய மாணவிகளின்வரவேற்பு விழா நடைபெற்றது,

விழாவின் தலைமையாக ஆலங்குளம் மணி மருத்துவமனை யின் மருத்துவர் திருமதி புஷ்பலதாஜான் அவர்களும்,வரவேற்புரை திரு வைரமுத்து நிர்வாகி ஸ்ரீ அன்னலட்சுமி இன்ஸ்டிட்யூட் சுரண்டை .சிறப்பு விருந்தினராக திருமதி மாணிக்கசெல்வி ,சிங்கப்பெண் உதவி ஆய்வாளர், மற்றும் திரு துரை அவர்கள் தென்காசி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், திரு இளமுருகன் வட்டார கல்வி அலுவலர் ( ஓய்வு)

திரு பாலசந்திரன் தீயணைப்பு துறை, திரு அமல்ராஜ் தமிழ்நாடு டுடே செய்தியாளர், இ. ஜெரால்டு டிசௌசா உள்ளாட்சி முரசு செய்தியாளர்,திரு சுரேஷ் .குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், திருமதி அருணாலட்சுமி .குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம், திருமதி வெள்ளநாயகி யோகா பேராசிரியர், திருமதி சின்னம்மாள் கிராம செவிலியர்.அனைவரும் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர், மாணவியரின் பரதம் மற்றும் நாடகம் கலைநிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைபெற்றது கடந்த ஆண்டு தேர்ச்சி பெற்ற மாணவியர்களுக்கு

நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன.நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன, ஆசிரியப்பெருமக்கள் நன்றியுரை வழங்கினார்கள்,



தென்காசி மாவட்டம், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தொகுதி I தேர்வு நடைபெற்ற மையமான பாரத் மான்டிசரி பள்ளியினை இன்று 27.9.26 மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டார்.

# சிறுநாகலூர். ஊனமலை மாத்தூர், செண்டிவக்கம், ஒரத்தூர் உள்ளிட்ட கிராமங்களில் தவெக வேட்பாளர் மரகதம் குமரவேலுக்கு கிராம மக்கள் வரவேற்பு

செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தலில் சிறுநாகலூர். ஊனமலை.மாத்தூர். செண்டிவக்கம்,ஒரத்தூர் உள்ளிட்டகிராமங்களில் தவெக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் மரகதம் குமாரவேலுக்கு பெற்ற மகளுக்கு தாய் விட்டு சீர்வரிசை எடுப்பது போல் கிராம மக்கள் பட்டாசு வெடித்து ஆரத்தி எடுத்து மேளதாளம் முழக்கங்களுடன்



பூமழை தூவி மாலை அணிவித்து உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்

வேட்பாளர் மரகதம் குமரவேல் அவர்கள் தமிழக வெற்றி கழகத்தின் சாதனைகளை பொதுமக்களிடையே வாக்கு சேகரித்தார் சமூக நீதி வெற்றி கூட்டணி சார்பில் விசிக அன்புச்செல்வன். மண்டல செயலாளர் சூ.க. ஆதவன். ஒன்றிய செயலாளர் தயாநிதி. காங்கிரஸ்கட்சிமற்றும்மதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இந்தியத் தேர்தல் ஆணையரைக் கண்டித்தும், அவரைக் கைது செய்ய வலியுறுத்தியும் தூத்துக்குடி கலெக்டர் அலுவலகம் முன்பாகக் காங்கிரஸ் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



தூத்துக்குடி இந்திய தேர்தல் ஆணையத்தின் வாக்கு திருட்டு முறைகேடுகளை கண்டித்தும் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி தூத்துக்குடி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்அலுவலகத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம்

இந்தியா முழுவதும் இந்திய தேர்தல் ஆணையத்தின் எஸ் ஐ ஆர் குளறுபடிகளை கண்டித்தும் இதன் காரணமாக ஏற்படுத்தப்பட்ட வாக்கு திருட்டு முறைகேடுகளை கண்டித்தும் இதற்கு காரணமான தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பதவி விலக வலியுறுத்தி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இதன் ஒரு பகுதியாக இன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர்அலுவலகத்தைதூத்துக்குடி மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் காங்கிரஸ் கட்சியினர் முற்றுகையிட்டு தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உடனடியாகபதவி விலக வேண்டும் என வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டிஉறுப்பினர் முன்னாள் எம்எல்ஏ கருமாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் தூத்துக்குடி மாநகர காங்கிரஸ் கமிட்டி தலைவர் சகாயராஜ் உள்ளிட்ட ஏராளமான காங்கிரஸ் நிர்வாகிகள் தொண்டர்கள் கலந்து கொண்டு மத்திய பாரதிய ஜனதா கட்சி அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர்.

# தேனி அல்லிநகரம் 4வது வார்டில் சுகாதார சீர்கேடு குவிந்து கிடக்கும் குப்பைகள் பொதுமக்கள் அவதி

தேனி நகராட்சி 4-வது வார்டுஅல்லிநகரம் பகுதி யில் 600-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வ சித்து வருகின்றன. இங்கு கடந்த 10 நாட்களுக்கும் மேலாக பாதாள சாக்கடை நிரம்பி வழிந்து, தெருக்களில் கழிவுநீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசி வருகிறது. இதனால் டெங்குஉள்ளிட்டநோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது. சாக்கடை கழிவுநீர் தேக்கத்துடன் சேர்த்து,பிளாஸ்டிக் மற்றும் வீட்டுக்கழிவுகள் கொட்டப்பட்டு



குப்பைக்கூடாரமாக காட்சி அளிக்கிறது.நாட்களாக அகற்றப்படாத இந்த குப்பைகளால் அப்பகுதி முழுவதும் கடும் சுகாதாரசீர்கேடு ஏற்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாகமும் உடனடியாக பாதாள சாக்கடையைச் சீரமைத்து, குப்பைகளை அகற்றி,உடனடியாக சரிசெய்து தர வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்துகின்றனர்.



★மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.ச.ஜோசப் விஜய் அவர்கள் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை 28.9.26 தொடங்கி வைத்ததை தொடர்ந்து, தென்காசி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனை கலையரங்கத்தில் மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர்/ தென்காசி மாவட்ட பொறுப்பு அமைச்சர் மரு.வி.கே.ராஜீவ் அவர்கள் குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தினை அணிவித்து துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சியர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் உடன் உள்ளார்.★

# தூத்துக்குடி சோலார் நிறுவனத்திற்கு எதிராக வெளிநபர்கள் சதி: பாதுகாப்புக் கோரி ஆட்சியரிடம் மூலக்கரை கிராம மக்கள் மனு!



தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தாலுகாவிற்கு உட்பட்ட மூலக்கரை கிராமத்தில் இயங்கி வரும் சூரிய மின் உற்பத்தி நிறுவனத்திற்கு எதிராக, சமூக ஆர்வலர்கள் என்ற போர்வையில் சில வெளிநபர்கள் சுயநல நோக்கத்தோடு செயல்படுவதாகக் கூறி, அப்பகுதி மக்களும் சோலார் நிறுவனப் பணியாளர்களும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்துள்ளனர்.

6 ஆண்டுகால நன்மதிப்பு:

மூலக்கரை, மேலூர், நடுவூர் மற்றும் கீழூர் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய ஸ்ரீ மூலக்கரை கிராமத்தில் 'ரெனிப்ரா எனர்ஜி இந்தியா லிமிடெட்' (ReneFra Energy India Ltd) என்ற சோலார் மின் உற்பத்தி நிறுவனம் கடந்த 6 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம் அமைக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரை, அங்குள்ள விவசாய நிலங்களுக்கும், கால்நடைகளுக்கும், பொதுமக்களுக்கும் எவ்விதப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

கிராம வளர்ச்சிக்கு உறுதுணை:

இந்நிறுவனம் மூலம் தூத்துக்குடி மூலக்கரை கிராமம்பல்வேறுபொருளாதார மற்றும் சமுதாய நன்மைகளைப் பெற்றுள்ளது.

வாழ்வாதார மேம்பாடு: கிராமத்தைச் சேர்ந்த மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள சுமார் 15 -க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பு வழங்கி அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தியுள்ளது.

சமூகப் பணிகள்: கிராமக் கோவில் திருவிழாக்கள் மற்றும் இளைஞர்களுக்கான கபடிபோட்டிகள் போன்ற விளையாட்டு நிகழ்வுகளுக்குக் கடந்த 6 ஆண்டுகளாக முதன்மை நன்கொடையாளராகப் பங்களித்து வருகிறது.

பாதிப்பற்ற மின் உற்பத்தி: மின்சாரத்தைக் கொண்டு செல்ல அமைக்கப்பட்டுள்ள மின் கோபுரங்கள் மற்றும் மின்கம்பங்களால் விவசாயிகளுக்கோ அல்லது கால்நடை மேய்ச்சல் நிலங்களுக்கோ எந்தவிதச் இடையூறும் இதுவரை ஏற்படட்டதில்லை.

பணம் பறிக்கும் நோக்கத்துடன் போராட்ட சதி:

இந்தச் சூழலில், சமூக ஆர்வலர்கள் என்ற பெ யரில் செயல்படும் சி லர், ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக முற்றுகைப் போராட்டம்நடத்தத்திட்டமிட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதுகுறித்து ஆட்சியரிடம் மனு அளித்தவர்கள் கூறுகையில், " போராட்டம் அறிவித்துள்ள அமைப்பில் எங்களது கிராமத்தைச் சேர்ந்த மக்கள் யாரும் இல்லை. முற்றிலும் வெளிநபர்களைக் கொண்டு இந்த இயக்கம் நடத்தப்படுகிறது. சோலார் நிறுவனத்திடம் பணம் பறிக்கும் நோக்கோடும், சுயலாபத்திற்காகவும் மட்டுமே 'சமூக ஆர்வலர்கள்' என்றபோர்வையில் சிலர் இத்தகைய இடையூறுகளைச்செய்து வருகிறார்கள்" என்று குற்றம் சாட்டினர்.

மக்களின் கோரிக்கை:

சூரிய மின் உற்பத்தி நிலையத்திற்குத் தங்களது முழு ஆதரவையும் தெரிவித்துள்ள மூலக்கரை கிராம மக்கள், போலி சமூக ஆர்வலர்கள் மீது காவல்துறையும் மாவட்ட நிர்வாகமும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளனர்.மேலும்,கிராமத்தின் அமைதியைப் பாதுகாக்கவும், நிறுவனத்தின் செயல்பாடுகள் தடையின்றித் தொடரவும் உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்து ள்ளனர்.

# ஈரோடு நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் தினசரி காய்கறி சந்தையில் இலவச மருத்துவமுகாம்: 200க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர்

ஈரோடுநேதாஜிசுபாஷ் சந்திரபோஸ் தினசரி வியாபாரிகள் மேம்பாட்டு நலச்சங்கம் மற்றும் குத்தகைதாரர்கள் இணைந்து முன்னெடுத்த இந்நிகழ்வில், அப்போலோ சுகர் கிளினிக்ஸ் (பெரியார் நகர்), அப்போலோ டென்டல் (பிரப் ரோடு) மற்றும் ஈரோடு விஜய் கண் மருத்துவமனை ஆகியவை ஒன்றிணைந்து பொதுமக்களுக்குமருத்துவசேவைகளை வழங்கின.

காலை 7.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை நடைபெற்ற இந்த முகாமில், சென்னை அப்போலோ மருத்துவ நிபுணர் சரசநாயகன் (எ) சரண் ஆலோசனையின் பேரில், பொதுமக்களுக்கு முழுமையான சர்க்கரை நோய் பரிசோ-



தனை மற்றும் ரத்த அழுத்தப் பரிசோதனைகள் துல்லியமாக மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து, அப்போலோ பல் மருத்துவமனை மருத்துவர் கிருத்திகா தலைமையில் பல் பரிசோதனைகளும், விஜய் கண் மருத்துவமனை மருத்துவக் குழுவினரால் விரிவான கண் பரிசோதனைகளும் இலவசமாக வழங்கப்பட்டு உரிய மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இம்முகாமில் தினசரி காய்கறி சந்தைக்கு வருகை தந்த விவசாயிகள், கடை வியாபாரிகள் மற்றும் காய்கறி வாங்க வந்த பொதுமக்கள் என 200-க்கும் மேற்பட்டோர் நேரில் கலந்துகொண்டு பயனடைந்தனர். பொதுமக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்ற இந்த மருத்துவ முகாமிற்கான அனைத்து ஏற்பாடுகளையும், அப்போலோ சுகர் கிளினிக் ஈரோடு கிளை மேலாளர் அருண் தலைமையிலான குழுவினர் மிகச் சிறப்பாக ஒருங்கிணைத்து வழிநடத்தினர்.

# தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் சென்னை மாநகர நிர்வாகிகள் சந்திப்பு நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது!



தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் சென்னை மாநகர நிர்வாகிகள் சந்திப்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் சென்னையில் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு தமிழ்நாடு இஸ்லாமிய கூட்டமைப்பின் நிறுவனத்தலைவர்தூத்துக்குடி சம்சுதீன் S.M. மற்றும் மாநிலக் கௌரவத் தலைவர் சாத்தூர் S. சையது இப்ராஹிம் ஆகியோர் தலைமை தாங்கி கலந்தாய்வு நடத்தினர்.

இந்நிகழ்வில் சிறப்பு அழைப்பாளர்களாக தேசிய முஸ்லிம் முன்னேற்றக் கழக நிறுவனர் ஜப்பார்,காவலர்கள் மற்றும் பொதுமக்கள் கூட்டமைப்பின் நிறுவனரும், IFTN மாநில இணைச் செயலாளருமான அப்துல் அஜீஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மேலும், சென்னை மாநிலத் துணைத்தலைவர் சுல்தான், மாநிலச் செய்தித் தொடர்பாளர் மல்கா அலி, சென்னை மண்டல உலமாபெடரேஷன் கவுன்சில் ஒருங்கிணைப்பாளர் பெரம்பூர் சாகுல் ஹமீது, IFTN பம்மல்பகுதிஒருங்கிணைப்பாளர் கபீர் அகமது, இயக்குநர் திருநாவுக்கரசு மற்றும் பத்திரிகையாளர் சுந்தர் உள்ளிட்டப் பல்வேறு முக்கிய நிர்வாகிகளும், சிறப்பு அழைப்பாளர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில், நிகழ்வில் பங்கேற்ற நிர்வாகிகள், சிறப்பு விருந்தினர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் மாநில நிர்வாகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றிகளும், பிரார்த்தனைகளும் (துஆ) தெரிவிக்கப்பட்டது.

# ஈரோடு மாவட்டத்தில் கலெக்டர் ச.கந்தசாமி மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று குறைகளை கேட்டறிந்தார்



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று (28.09.2026) நடைபெற்றது. இக்குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, ஆதார் கார்டு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, தார்சாலை, மகளிர் உரிமைத்தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கு கல்வி உதவித்தொகை,வேலைவாய்ப்பு, கல்விக்கடன், தொழில் கடன், குடிநீர் வசதி, சாலை வசதி, அடிப்படை வசதிகள் மேம்பாடு, இலவச வீட்டுமனை பட்டா, தனிப்பட்டா மாறுதல், மின்னணு குடும்ப அட்டை, மின் இணைப்பு, தெரு விளக்கு, ஆக்கிரமிப்பு மற்றும் காவல் துறை நடவடிக்கை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் எனமொத்தம்360மனுக்கள் வரப்பெற்றன. பொதுமக்கள் அளித்த பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பெற்று உரிய துறை அலுவலர்களிடம் வழங்கி அவற்றின் மீது உடனடி நடவடிக்கை எடுத்திட உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) ரமேஷ் மாவட்ட வழங்கல் அலுவலர் மகேஸ்வரி, மாவட்ட சமூக நீதித் துறை அலுவலர் சுடலைமணி, மாவட்ட பிற்படுத்த ப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜாகீர் உசேன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர் கணேஷ், உதவி இயக்குநர் ஊராட்சிகள் (பயிற்சி) ம.பிரசாந்த், அனைத்துத்துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு புன்செய்புளியம்பட்டியில் அகில இந்திய விஸ்வகர்மா பேரவை 39வது தேசிய பொதுக்குழு கூட்டம்

## கல்வி, வேலைவாய்ப்பில் உரிய இடஒதுக்கீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் - 2,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்பு



அகில இந்திய விஸ்வகர்மா பேரவையின் 39-வது தேசிய பொதுக்குழு கூட்டம் ஈரோடு மாவட்டம் புன்செய்புளியம்பட்டியில் சிறப்பாக நடைபெற்றது.நாடு முழுவதும் இருந்து விஸ்வகர்மா சமூகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள், பிரதிநிதிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாக கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு அகில இந்திய விஸ்வகர்மா பேரவை தேசிய தலைவர் குமார் ஆச்சாரி தலைமை வகித்தார். ஈரோடு மாவட்ட செயலாளர் மூர்த்தி முன்னிலை வகித்தார். மாநில பொதுச்செயலாளர் மருதுராஜ் கணேஷ் பொதுக்குழுவை தொடங்கி வைத்து பேசினார். பொதுக்குழு கூட்டத்தில் விஸ்வகர்மா சமூக மக்களின் கல்வி மற்றும் வேலைவாய்ப்பு தொடர்பான பல்வேறு கோரிக்கைகள் குறித்து விவாதிக்கப்பட்டன. குறிப்பாக கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் உரிய இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. விஸ்வகர்மா சமூக மக்களின் வாழ்வாதாரம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்து சமய அறநிலையத்துறைக்கு சொந்தமான கோவில்களில் அறங்காவலர்கள் நியமனம் செய்யும்போது விஸ்வகர்மாசமூகத்தினருக்கு உரிய பிரதிநிதித்துவம் மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது.

தமிழக அரசு கொண்டு வந்துள்ள தாயுமானவர் திட்டத்தில்,நல வாரியத்தில் பதிவு செய்துள்ள விஸ்வகர்மா சமூக உறுப்பினர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மற்றும் வாய்ப்புகள் வழங்க வேண்டும்எனவும்வலியுறுத்தப்பட்டது.

பொதுக்குழுவில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த தேசிய பொதுக்குழு கூட்டத்தில் தமிழகம் மட்டுமின்றி ஆந்திரா,புதுடெல்லி,கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து 2,000-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் விஸ்வகர்மா சமூகத்தின் கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம், சமூக முன்னேற்றம் உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு,சமூக நலன் சார்ந்த பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# ஈரோடு மாநகர் மாவட்ட அதிமுக அம்மா பேரவை இணைச்செயலாளராக சி.கண்ணன் நியமனம்: கழக தலைமைக்கு நெஞ்சார்ந்த நன்றி



அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஈரோடு 'மாநகர் மாவட்ட 'புரட்சித் தலைவி அம்மா பேரவை' இணைச் செயலாளராக சி.கண்ணன் நியமிக்கப்பட்டுள்ளார். எளிய தொண்டனான தமக்கு இந்த நல்வாய்ப்பினை நல்கிய அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களுக்கும், இப்பொறுப்பிற்குப் பரிந்துரை செய்த ஈரோடு மாநகர் மாவட்ட கழகச் செயலாளர் இரா. மனோகரன் அவர்களுக்கும் ஈரோடு மாநகர் மாவட்ட புரட்சித்தலைவி அம்மாபேரவைஇணைச் செயலாளர் சி.கண்ணன் தனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துள்ளார். மேலும், கழகத்தின் வளர்ச்சிக்காகவும், மக்கள் நலப்பணிகளுக்காகவும் கழகப் பொதுச்செயலாளர் எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் உண்மை விசுவாசியாகத் தொடர்ந்து தீவிரமாகப் பாடுபடப்போவதாக அவர் உறுதியளித்துள்ளார். புதிய பொறுப்பேற்றுள்ள ஈரோடு மாநகர் மாவட்ட புரட்சித் தலைவி அம்மா பேரவை இணைச் செயலாளர் சி.கண்ணனுக்கு கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலரும் வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# ஈரோடு மாவட்ட குலாலர் சங்க முப்பெரும் விழா: பேரரசர் சாலிவாகனனுக்கு மணிமண்டபம் அமைக்க கோரிக்கை



ஈரோடுமாவட்ட குலாலர் சங்கத்தின் சார்பில் மண்பாண்டக் கலைஞர்களுக்கு விருது வழங்கும் விழா, சமுதாய மாமனிதர் விருது வழங்கும் விழா மற்றும் 37-ம் ஆண்டு மாணவ-மாணவியர்களுக்கான கல்வி பரிசளிப்பு விழா ஆகிய முப்பெரும் விழா (27.09.2026) அன்று ஈரோடு பேருந்து நிலையம் அருகில் உள்ள செல்லாயம்மாள் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இவ்விழா ஈரோடு மாவட்ட குலாலர் சங்க கல்விப் பரிசளிப்பு அறக்கட்டளைத் தலைவர் கா.பா. ஆறுமுகம் தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்டத்தலைவர் S.கனகராஜ் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

ஈரோடு மாவட்டச் செயலாளர் N. சக்திவேல் சங்கத்தின் ஆண்டறிக்கையையும், மாவட்டப் பொருளாளர் (பொறுப்பு) M. கருப்பண்ணன் நிதிநிலை அறிக்கையையும் சமர்ப்பித்து வாசித்தனர்.

இவ்விழாவில் மாணவ-மாணவிகளுக்கு கல்வி, உயர்கல்வி மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்து சிறப்பு வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ-மாணவிகளுக்கு கல்விப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், மண்பாண்டத் தொழிலில் சிறந்து விளங்கும் கலைஞர்கள் மற்றும் சங்கத்தின் மூத்த முன்னோடிகளுக்குப் பொன்னாடை போர்த்தி விருதுகள் வழங்கப்பட்டன.

விழாவில் நிறைவேற்றப்பட்ட முக்கியத் தீர்மானங்கள்:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மண்பாண்டத் தொழிலாளர்களுக்கு அரசு குளங்களில் இருந்து களிமண்ணை இலவசமாக எடுத்துக்கொள்ள ஆணை வழங்கப்பட்டதற்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர்கள் நல வாரியத்திற்கு தலைவர் மற்றும் உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைக்க தமிழக அரசை கேட்டுக்கொள்வது.

மண்பாண்டத்தொழில் செய்து வரும் குலாலர் சமுதாயத்திற்கு நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் உரிய பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்துவது.

பாரத நாட்டை ஆட்சி செய்த விக்கிரமாதித்தனை வென்று வீழ்த்தி, 56 தேசங்களையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த பேரரசர் மாவீரர் சாலிவாகனனின் திருவுருவச் சிலை மற்றும் மணிமண்டபத்தை தமிழக அரசு சார்பில் அமைத்து தர வேண்டும் எனக் கேட்டுக்கொள்வது.

தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் குடியரசு மற்றும் சுதந்திர தின விழாக்களில் சிறப்பு நிகழ்ச்சிகள் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுவது போன்று, மண்பாண்டத் தொழிலாளர்களுக்கும் உரிய அங்கீகாரத்துடன் நலத்திட்ட உதவிகள் வழங்க வேண்டும்.

மண்பாண்டத் தொழிலை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் வகையில் மண்பாண்டத் தொழில் பயிற்சி நிலையங்களை மாவட்ட அளவில் அமைத்திட வேண்டும். களிமண்ணால்செய்யப்பட்ட மண்பாண்டங்களில் சமைத்த உணவின் நன்மைகள் குறித்து எதிர்கால மாணவர்கள் அறிந்து கொள்ளும் வகையில், தமிழக அரசின் பாடத்திட்டத்தில் ஒரு பிரிவை சேர்த்திட வேண்டும்.

அரசு சார்பாக மக்கள் தொகை கணக்கெடுப்பு நடைபெறும்போது சாதிவாரியான கணக்கெடுப்பை முறையாக மேற்கொண்டு, அதன் அடிப்படையில் இடஒதுக்கீடு வழங்கிட வேண்டும் என்றும், குலாலர் சமுதாய மக்களுக்கு 5 சதவீத உள் ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்றும் வலியுறுத்துவது.

தமிழ்நாடு மண்பாண்டத் தொழிலாளர் நலவாரியத்தில் இதுவரை பதிவு செய்யப்படாத அனைத்து தொழிலாளர்களையும் பதிவு செய்து, மழைக்கால நிவாரண உதவித்தொகை மற்றும் மின்சாரத்தால் இயங்கக்கூடிய சுழலும் மின்சக்கரத்தை இலவசமாக வழங்கிட தமிழக அரசை கேட்டுக்கொள்வது.

மண்பாண்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம், கல்வி வளர்ச்சி மற்றும் பாரம்பரிய கலை பாதுகாப்பு ஆகியவற்றை வலியுறுத்தி மேற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

இவ்விழாவில், ஈரோடு மாவட்டம் முழுவதிலும் இருந்து சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள், மண்பாண்டக் கலைஞர்கள், மாணவ-மாணவிகள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

# ஈரோட்டில் தேசிய பாரா வாலிபால் சாம்பியன்ஷிப் தமிழ்நாடு – ஹரியாணா அணிகள் சாம்பியன் பட்டம் வென்று அசத்தல்



ஈரோடு திண்டலில் உள்ள வேளாளர் சி.பி.எஸ்.இ. பள்ளி மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது தேசிய அளவிலான பெடரேஷன் கப் பாரா வாலிபால் சாம்பியன்ஷிப் போட்டியில், ஆண்கள் பிரிவில் தமிழ்நாடு அணியும், பெண்கள் பிரிவில் ஹரியாணா அணியும் சாம்பியன் பட்டம் வென்றன.

எம்.சி.ஆர். டிராபி-2026 க்காக நடைபெற்ற இப்போட்டியில் 9 மாநிலங்களைச் சேர்ந்த 8 அணிகளுடன், 270-க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர்.

ஆண்கள் பிரிவில் ஆந்திரப் பிரதேசம் 2-ஆம் இடத்தையும், கர்நாடகம் 3-ஆம் இடத்தையும் பிடித்தன.

பெண்கள் பிரிவில் குஜராத் 2-ஆம் இடத்தையும், ஜார்க்கண்ட் 3-ஆம் இடத்தையும் பெற்றன.

சாம்பியன் அணிகளுக்கு தலா ரூ.30,000, இரண்டாம் இடம் பெற்ற அணிகளுக்கு தலா ரூ.10,000 பரிசுத்தொகை வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு பாரா வாலிபால் சங்கத் தலைவர் மக்கள்ராஜன், தொழிலதிபர் எம்.சி. நிக்சன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்குபரிசுகளை வழங்கினர்.

# Indian Coast Guard saves foreign chemical tanker from capsizing off Paradip coast, 23 onboard rescued



*The Indian Coast Guard on Monday averted a major crisis at the sea as it rescued an unstable chemical tanker, carrying 23 crew members, off the coast of Paradip in Odisha. The foreign vessel was safely taken in tow as the ICG swung into action on receiving a distress call.*

*In a post on X, the Indian Coast Guard said, "Following a critical distr ess call from MT Seagull 9 of f #Paradip, #ICGS Vishwast launched a swift & decisive operation to rescue the unstable chemical tanker carrying 9,000 MT palm oil & 23 crew members."*

*Sharing details of the operation, the Indian Coast Guard said a specialist Damage Control Team boarded the vessel, used submersible pumps to remove water from the ballast tanks and sealed damaged sea-pipelines to stabilise the tilting ship.*

*To strengthen pollution response and maintain continuous surveillance, an ICG Pollution Control Vessel and an Offshore Patrol Vessel were also diverted to the site, it said. An ICG Dornier aircraft confirmed that the minor palm-oil sheen observed in the area had completely dissipated.*

*"The ship is now safely under tow towards Paradip. ICG units remain on active s entinel watch-ensuring s afety and protecting our oceans 24/7," the ICG said.*

*The Indian Coast Guard, which is the country's maritime law enforcement agenc y, is meant to ensure the safety of India's offshore assets, secure sea lines of com m unication, respond to e mergencies at sea, combat marine pollution, as well as, provide humanitarian assistance.*

*Earlier, on September 11, t he Indian Coast Guard s afely evacuated 21 crew m embers after a merchant v essel, MV KMAX EMPEROR, collided with ano ther merchant ship, MV TRUE MARINER, near the outer anchorage OTB Kandla in Gujarat.*

*Last month, the coast guard carried out search and rescue o perations after cargo ship MV Ocean Winner sank in the Bay of Bengal on August 2 1. The 1998-built bulk c arrier, carrying about 71,200 metric tonnes of iron ore fines from Paradip port i n Odisha to China, sank around 290 nautical miles off P aradip. The vessel was carrying 24 crew members, including 20 Chinese n ationals, one Bangladeshi and three Myanmar nationals.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004, Editor FARUK ALI M.